*1*

# ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலம், கி.மு. 4004–2348

## *படைப்பில் இருந்து ஜலப்பிரளயம் வரை*
## *ஆதி. 1:1-8:13*

**அறிமுகம்: ஆதியாகம புத்தகம்.**—ஆதியாகமம் (சந்ததி, தொடக்கம்) என்பது "தொடக்கங்களின்" புத்தகமாக உள்ளது. ஆதி. 1:1 எல்லாவற்றின் தொடக்கத்தைக் கொடுக்கின்றது. "வம்ச வரலாறு" என்ற சொற்றொடர் பின்வரும் பத்து இடங்களில் உள்ளது: "வானமும் பூமியும் சிருஷ்டிக்கப் பட்ட வரலாறு;'' ஆதி. 2:4; ''ஆதாமின்,'' 5:1; ''நோவாவின்,'' 6:9; "நோவாவின் புதல்வர்களின்," 10:1; "சேமின்," 11:10; "தேராகுவின்," 11:27; ''இஸ்மவேலின்,'' 25:12; ''ஈசாக்கின்,'' 25:19; ''ஏசாவின்,'' 36:1; "யாக்கோபின்," 37:2. இந்தச் சொல் வழக்கை அடிக்கடி பயன்படுத்திய தென்பது ஏதோ தற்செயலானதல்ல. எழுத்தாளர், வரலாற்றின் தொடக்கங் களை உணர்வுடன் கையாளுகின்றார். வேதாகமத்தின் முதல் புத்தகத்தினு டைய இந்தப் பண்பானது தொடக்கத்தில் கவனத்தைக் கவர்ந்தது, மற்றும் இது தக்க வகையில் "ஆதியாகமம்" என்று அழைக்கப்பட்டது.

***1. அண்டத்தின் தொடக்கம்*** (ஆதி. 1:1).—*அ. பிரச்சனை விவரிக்கப் பட்டது.*—இரும்புப் பாளம்/கம்பி ஒன்று கொடுக்கப்பட்டால், நாம் அதிலிருந்து சுத்தியல்கள், கத்தரிக்கோல்கள், ஊசிகள், கடிகாரச் சுருள் கம்பிகள், முதலியவற்றைச் செய்ய முடியும். அது படைப்பாய் இருப்ப தில்லை; அது உருமாற்றமாய் உள்ளது. இரும்பு எங்கிருக்கிறது? யார் அதை உருவாக்கியது? இங்கு ஒரு அண்டம் உள்ளது: சூரியன், விண்மீன்கள், கடல்கள், பல தரப்பட்ட பக்கங்களுடைய வாழ்வு. உருமாற்றம் பற்றியல்ல ஆனால் தொடக்கம் பற்றியே ஆதாரக் கேள்வி உள்ளது.

*ஆ. பிரச்சனை தீர்க்கப்பட்டது.*—பல காலங்களாக இந்தப் பிரச்சனை யின் மீது காரண அறிவு செயல்பட்டது,[1] "நித்தியமானது"; "தானாகவே ஏற்படுத்தப்பட்டது"; "தற்செயலானது"; போன்றவை அளிக்கப்பட்ட தீர்வு களாய் இருந்தன. பிற தீர்வுகள் முழுமையான பல தெய்வக் கோட்பாட்டு டன் சித்தரிப்புக் கலையைப் பெற்றன. அபிப்பிராயங்களின் இந்தக் குழப்பத் திற்கு மத்தியில், நமது எழுத்தாளர், தற்செயலானது எதுவும் இருப்பதில்லை;

தானாகவே எதுவும் ஏற்படுத்தப்பட்டதில்லை; ஒவ்வொரு விளைவுக்கும் தகுந்த காரணம் இருக்க வேண்டும்; என்று தெளிவாய்க் காண்கின்றார். ஏவப்பட்ட அவரது எழுதுகோலில் இருந்து வந்த ஒரு வார்த்தையானது இந்தப் பிரச்சனையைத் தீர்க்கிறது; "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."[2] தேவன் என்பது முடிவாயிருக்கிறது. தந்த தேவனை, மற்ற யாவும் பின் தொடருகின்றன. "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:9).

*இ. காலம்.*—"ஆதியிலே." அறிவியலானது கற்றறிந்த வகையில் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளைப் பற்றிப் பேசுகின்றது. ஆதியாகமமோ, "ஆதியிலே" என்று மட்டும் கூறுகின்றது.

***2. ஒழுங்கமைவின் தொடக்கம்*** *(ஆதி. 1:2-2:3).*—படைப்பு பற்றிய பதிவேடானது *(அ) ஒரு மிக முந்திய பெருங்குழப்பம்,* "ஒழுங்கின்மையும், வெறுமையும்"; *(ஆ) ஒழுங்கு படுத்தப்பட்ட சக்தி;* "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்"[3]; *(இ)* அடுத்தடுத்து வந்த ஆறு நாட்கள் என்பவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறது. (1) வெளிச்சத்தின் தொடக்கம். லேப்லாஸ் என்பவர் நெபுலார் கருதுகோளை எழுதியவ ராவார். அது தொடக்கத்தை ஆதரிப்பதற்கல்ல ஆனால் இந்த அண்டத்தைப் பற்றி விவரம் தருவதற்கான முன்னேற்றப்பட்ட(கருத்)தாக இருந்தது. அந்தக் கோட்பாட்டின்படி, அதிக வெப்பத்துடன் இணைந்த வாயுப் பொருளின் சுருக்கமானது/செறிவானது வெளிச்சத்தை உமிழ்ந்தது. சூரியனுக்கு முன்னதாகவே வெளிச்சம் உண்டாக்கப்பட்டது என்று கூறிய மோசேயை மதியற்றவர் என்றும், ஆனால் அதே விஷயத்தைக் கூறிய லேப்லாஸை அறிவியல் அறிஞர் என்றும் மக்கள் கூறுகின்றனர். (2) ஆகாய விரிவு அல்லது வான வெளியின் தொடக்கம். பூமியின் மேல்ஓடு குளிர்ந்தது; நீராவியின் கனத்த உறையானது செறிவடைந்து மழையாக விழுந்தது அல்லது மேகங்களாக எழுந்தது, மற்றும் வானத்தின் விரிவானது தலைக்குமேல் நீல நிறம் கொண்ட எல்லைக்குட்படுத்த முடியாதது போன்ற காட்சியாயிற்று. (3) கண்டங்கள், கடல்கள் மற்றும் தாவரங்கள் ஆகிய வற்றின் தொடக்கம். (ஒரு காலத்தில்) கண்டங்கள், தீவுகள், கடற்கரைகள் எதுவுமின்றி உலகளாவிய கடல் இருந்திருக்க வேண்டும் என்று காணப் படுகின்றது. தேவன் பேசுகின்றார்/பேசினார்; சமுத்திரப் படுக்கைகளில் இருந்து கண்டங்கள் எழும்புகின்றன/எழும்பின; தீவுகள் கடல்களின் பரப்பின்மீது அழகுற அமைவுறுகின்றன/அமைவுற்றன, இவை முதலில் ஒன்றுமற்றதாகவும் வெறுமையாகவும் இருந்தன, ஆனால் கால ஓட்டத்தில் பல்வகைத் தாவரங்கள் இவற்றில் நிரம்பின. (4) சூரியன் சந்திரன் மற்றும் விண்மீன்கள் ஆகியவற்றின் தொடக்கம். படைப்பு பற்றிய பதிவானது "புலன் உணர்வு சார்ந்த" அல்லது "காட்சித்துவம் சார்ந்த" செயல் என்று கருத்தில் உணரப்படலாம், அதாவது, பூமியிலிருந்து பார்ப்பவருக்கு அவைகள் தோற்றமளிக்கும் வகையில் நிகழ்ச்சியாக விவரிக்கப்படலாம். நான்காம் நாளுக்கு முன்னதாக வான்பொருட்கள் நிச்சயமாய் அங்கு இருந்தன என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை, ஆனால் (4ம் நாளுக்குப்) பின்புதான் அவை பூமியிலிருந்து காணக் கூடியவைகளாயின. (5) கடல்

உயிர்கள் மற்றும் பறவையினங்கள் ஆகியவற்றின் தொடக்கம். வாழ்வின் கோடானது தடை செய்யப்பட்டுள்ளது. இது வரைக்கும் எந்த மிருகமும் பூமியில் சுற்றியதில்லை, எந்தப் பறவையும் காற்றில் பறந்ததில்லை, எந்த மீனும் கடலில் நீந்தியதில்லை. மீண்டும் ஒருமுறை தெய்வீக ஆணையானது முன் செல்லுகிறது, மற்றும் காற்றும் கடல்களும் உயிர் வாழ்வினை ஏராள மாய்ப் பெற்றன. இது நத்தைகள் மற்றும் ஊர்வன, பறவையினங்கள் மற்றும் மீன்கள் ஆகியவற்றின் காலமாய் உள்ளது. (6) நில - உயிரினங்கள் மற்றும் மனிதனின் தொடக்கம். மனித(ன்) (படைப்பு) என்பது ஆறாம் நாளின் பண்பாக உள்ளது; மனிதன் தேவ சாயாலாக இருக்கிறான் என்பது அவனது பண்பாக உள்ளது (ஆதி. 1:27). “சிருஷ்டித்தார்” என்பது இந்த அதிகாரத்தில் மூன்றுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது: 1:1ல், அண்டம் பற்றி; 1:21ல் விலங்குயிர்களின் தோற்றம் பற்றி; 1:27ல் மனிதனின் தொடக்கம் பற்றி. இவற்றில் முதல் பயன்பாடு இல்லாமையிலிருந்து இருத்தலுக்கு இடையி லுள்ள கோட்டைக் கடக்கின்றது, இரண்டாவது பயன்பாடு உயிரற்ற திலிருந்து உயிர் உள்ளதற்கு இடையிலுள்ள கோட்டைக் கடக்கின்றது, மூன்றாவது பயன்பாடு மிருகத்திற்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள கோட்டைக் கடக்கின்றது. மனிதனின் கீழான பக்கத்தில் அவன் தான் மீண்டும் செல்லுகின்ற மண்ணின் உருவத்தில் இருக்கின்றான், தாவர வாழ்வானது தனது மண்ணில் வேரூன்றியுள்ளது, மற்றும் விலங்கு அதன் மேற்பரப்பில் திரிகின்றது. ஆனால் அவன் (மனிதன்) மேல் நோக்குபவனா யிருக்கும்போது இவைகள் (விலங்கு மற்றும் தாவரம்) அவ்வாறு செய்வ தில்லை. அவன், பின்வருவனவற்றில் தேவனுடைய சாயலாயிருக்கிறான்: (i.) புத்தி கூர்மையுடன் புரிந்துகொள்ளுதலில் வல்லமை. மனிதனுக்கு முந்திய வேளையில் ஒழுங்கு முறையும் வனப்பும் இருந்தது; ஆனால் ஒழுங்கு முறையை அல்லது வனப்பை பாராட்டுவதற்கு அல்லது காரணத் தையும் விளைவையும் தொடர்பு படுத்துவதற்குப் பூமியில் எந்த ஜீவியும் இல்லை. தேவன் மட்டுமே படைக்க முடிந்தது; தேவனுடைய சாயலில் ஆன மனிதன் மட்டுமே தேவனுடைய படைப்பில் இருந்த திட்டத்தையும் வனப்பையும் உய்த்துணர முடிந்தது. (ii.) உணர்வறிவில், மதிநுட்பத்தில், ஏற்புடைய உணர்வில். (iii.) மதி நுட்பமாகத் தேர்ந்து கொள்ளுதலின் வல்லமையில். (iv.) ஒழுக்க இயல்பில், சரி மற்றும் தவறு ஆகியவை பற்றிய கருத்தறிவில். (v.) ஆளுகையில். ‘‘அவன் ஆளக் கடவன்’’[4] என்ற சொற்றொடர் அவனது “குடியேற்றப் பண்பாக” உள்ளது. இது அவனுக்குப் பூமியில் அவனது இயற்பெயரைத் தருகிறது, மற்றும் அதன் எல்லா விளைவு களையும் தருகிறது. இது பொருள் படைப்பை அதன் ஒழுக்கம் சார்ந்த அர்த்தத்தினால் உடுத்துவிக்கவும் செய்கிறது: இதன் முடிவு மனிதனாக உள்ளான், அவனுடைய மிக மேலான முடிவு தேவனாக இருக்கிறார்.

படைப்பு பற்றிய பதிவில் ஒன்று அல்லது இரண்டு அம்சங்கள் விசேஷக் குறிப்பிடுதலுக்குத் தகுதியானவைகளாய் உள்ளன. (1) அறிவியலில் நிலைநாட்டப்பட்ட விளைவுகளுடனான இதன் குறிப்பிடத் தக்க இசைவு; அதில் ஒரு தொடக்கம் இருந்தது; ஒழுங்கமைவுக்கு முன் அந்தப் பெருங் குழப்பம் இருந்தது; படைப்பு என்பது ஒரே வேளையில் (எல்லாம்)

நடைபெற்றதாயிராமல் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்றதாயிருந்தது; இது படிப்படியான வளர்ச்சியினால் செயல்பட்டது; இந்தப் படிப்படியான வளர்ச்சி என்பது தாழ்ந்தவற்றிலிருந்து உயர்ந்தவற்றிற்குச் சென்றது; மற்றும் கடைசியாக, வரிசையான படைப்புகளின் ஒழுங்கமைவைப் பொறுத்த அளவில் பொதுவான உடன்பாடு காணப்பட்டது. ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் ஒரு கற்பனைப் பணியாக உள்ளதா? அறிவியல் (வளர்ச்சி) அற்ற காலத்தில் டார்வின் அல்லது டின்டால் அல்லது ஹக்ஸ்லீ என்பவர்கள் இவ்வளவு நன்றாய்க் கற்பனை செய்திருப்பார்களா? (2) இது கண்டிப்பாக ஒரு வரலாறாயிருப்பதில்லை. வரலாறு என்பது தகவலுக்கான மனித ஆதார மூலங்களைப் பயன்படுத்துகின்றது; இதில் வாய்மொழிப் பாரம்பரியங்கள், எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் பதிவேடுகள், பழங்கால நினைவுச் சின்னங்கள் ஆகியவை அடங்கும். மனிதன் பூமியில் தோன்றியதற்கு முற்பட்ட காலத்தை எந்தப் பாரம்பரியமும் சென்றடைய முடிவதில்லை. இது ஒரு வெளிப்படுத்துதலை, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வெளிப் படுத்துதலைக் கொண்டிருக்க வேண்டும். வேதாகமம் இவ்வாறே தொடங்கி, இவ்வாறே முடிகின்றது. அறியப்படாத கடந்த காலமும், அறியப்படாத எதிர் காலமும், வேதாகமத்தை தொடங்குவதும் முடிப்பது மான தரிசனங்களில் வெளிப்படுத்தப்பட்டு நிலைநிற்கின்றன.

***3. பாவத்தின் தொடக்கம்*** *(ஆதி. 2:4-3:24).—ஆதி. 1:1-2:3* வசனப் பகுதியானது படைப்பைப் பற்றிய ஒரு பொதுவான விவரத்தைக் கொடுக்கின்றது. இந்தப் பகுதியானது மனிதனைப் பற்றி அதிகம் குறிப்பான விவரத்துடன் முக்கியமானவற்றை மீண்டும் எடுத்துரைக்கின்றது. முதல் பகுதியில், மனிதன் உட்பட்ட இயற்கையே ஆய்வுப் பொருளாக உள்ளது. இயற்கை யாவும் தேவனைத் தனது எல்லையற்ற மதிநுட்பமான ஆதார மூலமாகக் கண்டறிந்தது. இரண்டாவது பகுதியில் மனிதன் என்பவன் மாபெரும் ஆய்வுப் பொருளாய் இருக்கிறான். அவன் தன்னைப் படைத்த வரின் சாயலில் இருக்கின்ற காரணத்தினால் படைப்பின் கிரீடமாகவும் ஆள்பவனாகவும் தனது உண்மையான உறவுமுறையில் இங்கு முன் வைக்கப்பட்டுள்ளான்.

*அ. வரலாற்றில் மிக முந்திய நிலை.—*இங்கு நாம் தக்க வரலாற்றில் உள் நுழைகின்றோம். வெளிப்படுத்துதல் என்பது அறிவிற்கான மனித ஆதாரக் கூறுகளைப் பயன்படுத்தலாம். வரலாற்றில் மிக முந்திய நிலை பற்றிய நமது அறிவு பின்வரும் நான்கு விஷயங்களில் விரிவாக்கம் அடைகின்றது: (1) மனிதனின் தங்குமிடம். இது ஏதேன் தோட்டமாயிருந்தது. ஐப்பிராத்து மற்றும் இதெக்கேல் (டைகிரீஸ்) என்ற நன்கறியப்பட்ட இரு நதிகள் தென்மேற்கு ஆசியாவைச் சுட்டிக்காட்டுகின்றன. அறிவியல் ஆராய்ச்சி யினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, விரிவாய்ப் பரவியுள்ள பாரம்பரிய மானது காகேஸஸ் (மலையின்) பகுதியின் தெற்கில் உள்ள உயரமான நிலப்பகுதியே (மனித) இனத்தின் தொட்டில் என்று சுட்டிக்காண்பிக்கிறது. (2) சமுதாயம். மனிதன் தனிமையாய் இருப்பதற்கென்றோ அல்லது விலங்குயிர்களில் மிகவுயர்ந்த இனத்துடன் கூட உண்மை (குடும்பத்) தோழமையைக் காண்பதற்கென்றோ படைக்கப்படவில்லை. அவன்

இருத்தலுக்கான உயர்ந்த (நோக்க) முடிவுகள் அவனது சொந்த இனத்திலும் குடும்ப வாழ்விலும் மட்டுமே சாதிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. ஏவாள் படைக்கப்பட்ட விஷயமானது ஒருமைப்பாட்டின் இன்றியமை யாமையையும் (மனித) இனத்தின் சமத்துவத்தையும் போதிக்கின்றது. (3) தொழில். மனிதன் ஒருக்காலும் சோம்பேறியாய் இருக்கும்படி அர்த்தப் படுத்தப்படவில்லை. சோம்பேறித்தனத்தில் சக்திகள் துருப்பிடிக்கின்றன, ஒழுக்கங்கள் சிதைவடைகின்றன. ஆகையால், அவன் தோட்டத்தைப் பண் படுத்தி அதைக் காவல் செய்யும்படி அங்கு வைக்கப்பட்டான். (4) ஒழுக்க நிலை. வரலாற்றாளர், தேவனுடன் (மனிதன்) முழுமையாக ஐக்கியப் பட்டிருந்த நிலையை, முற்றிலுமான ஒன்றுமறியாத் தன்மை மற்றும் நம்பிக்கையின் ஆசீர்வாதத்தின் நிலையைச் சித்தரிக்கின்றார்; இது பெரிய அளவில் சுயாதீனமானதாயுள்ளது; "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத் தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்."[5]; இது, "ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்"[6] என்ற ஒரே ஒரு கட்டுப்பாட்டுடன் இருந்தது. சுயாதீனத்திற்கு வரையரைகள்/எல்லைகள் இருக்க வேண்டும். மனிதன் சட்டத்தை மதிக்க வேண்டும், மற்றும் உயர்வான நன்மைக்காக சுய நல விருப்பத்தைக் கீழ்ப்படுத்த வேண்டும். பூமியில் இராஜரீகம் செய்பவர் என்ற வகையில் உள்ள தேவனுக்கு அவன் கீழ்ப்படிய வேண்டும்.

ஆ. மீறுதல்.—பாவமும் பாவி ஒருவனும் ஏற்கனவே அண்டத்தில் உள்ளனர். இவ்விருவரும் ஏதேனுக்குச் செல்லத் தங்கள் வழியைக் கண்டறி கின்றனர். பாம்பு சாத்தானின் அடையாளமாக அல்லது முகவராகத் தோன்றுகின்றது (இ.வ. யோவா. 8:44; வெளி. 12:9; 20:2). சோதனையின் ஓட்டத்தையும் பாவத்தையும் கவனியுங்கள். மறைமுகமாய் உட்புகும் கேள்வியொன்று உள்ளது: "... புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" பின்பு ஒரு அவதூறான பொய் வருகிறது: "நீங்கள் சாகவே சாவதில்லை."[7] பிறகு தேவன்மீது நம்பிக்கையின்மை, தவறான விருப்பம், தவறான தேர்ந்து கொள்ளுதல், வெளிப்படையான கீழ்ப்படியாமை ஆகியவை மிக விரைவாக ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. தேவனிடத் திற்குத் திரும்புவது இவை எல்லாவற்றிலும் இருந்து திரும்புதல் ஆகின்றது. சத்தியத்தை விசுவாசித்தல், தேவனிடத்தில் நம்பிக்கை கொள்ளுதல், சரியான விருப்பம், சரியான தேர்ந்து கொள்ளுதல், தேவனுடைய சித்தத்திற்கு வெளிப்படையாகக் கீழ்ப்படிதல்.

இ. தண்டனை.—குற்றவுணர்வு மற்றும் விலகியிருத்தல் என்ற அவசியமான விளைவு இயல்பாகவே அங்கு பின் தொடருகின்றது; ஆதாமும் ஏவாளும் "தங்களை ஒளித்துக் கொண்டார்கள்"[8] அங்கு சட்ட ரீதியான தண்டனையும் (அவர்கள் மீது) வீழ்ந்தது: பெண்ணின்மீது வேதனைகள் பெருகப் பண்ணியது; ஆணின்மீது கடின உழைப்பு பெருகியது; இருப்பினும் இருவருக்கும் சர்ப்பத்தின் தலையை நசுக்கும் (ஸ்திரீயின்) வித்து பற்றிய வாக்குத்தத்தம் ஒரு மிக உயர்வான நம்பிக்கை யாகக் கொடுக்கப்பட்டது. ஆதி. 3:15ல், இழந்து போகப்பட்ட ஏதேன் தோட்டத்தின் நுழைவாயிலேயே கிறிஸ்துவின் மீட்பு ஊழியம் பற்றிய

*மங்கலான முதல் தீர்க்கதரிசனத்தை நாம் பற்றிப் பிடிக்கின்றோம்.*

***4. படைப்பு மற்றும் வீழ்ச்சியின் எதிரொலிகள்.***—*இங்கு பதிவு செய்யப்பட்ட மாபெரும் உண்மைகளின் சுவடுகள் பழங்கால இலக்கியங் களில் அடங்கியுள்ளன.*[9] *ஆனால் அச்சுவடுகள் தேவ நம்பிக்கையற்ற கருத்துக்களினால் நாசம் செய்யப்பட்டுள்ளன, மற்றும் இவை ஏவுதலின் மிக உன்னதமான பதிவினின்று வெகு தூரம் கீழே தாழ்ந்துள்ளன. "படைப்பின் வரலாறு போன்றே வீழ்ச்சியின் வரலாறும் உலகம் முழுவதிலும் நடமாடி யுள்ளது. தேவ நம்பிக்கையற்ற இனங்கள்/நாடுகள் இதை வடிவத்திலும், வண்ணத்திலும் ஆவியிலும் முற்றிலுமாக ஒருபோதும் மாறாவிட்டாலும், இதை மறு நடவு செய்து, தங்கள் புவியியல், தங்கள் வரலாறு, தங்கள் புராணங்கள் ஆகியவற்றுடன் நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளாத அளவுக்கு கலந்து விட்டனர். இருப்பினும் இங்கு, பிரமாணத்தில் இது உலகளாவிய மனிதப் பண்பை, உலகளாவிய உண்மையை, மற்றும் படைப்பின் வேதனைக் குரல்களை, கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற மீட்பை, மற்றும் எடுத்துரைக்கப்பட்டதன் நேரடியான/நேர்ப்பொருளான சத்தியத்திற்கு அவர்களின் சாட்சியத்தில் ஒவ்வொரு மனிதரும் (செய்யும்) இரகசிய உடன்படிக்கையின் இருதயம் போன்ற மையப் பகுதியைப் பாதுகாக்கின்றது."*[10]

***5. பலியின் தொடக்கம்*** *(ஆதி. 4:1-15).—இந்த முதல் மனித குடும்பத் திற்கு(ள்) (பிறந்து) வந்த பிள்ளைகள் சூரிய ஒளியையும் நிழலையும் கொண்டு வந்தனர். சகோதரர்கள் தங்கள் தொழில்களிலும் தாங்கள் கொண்டு வந்த காணிக்கைகளிலும் மாறுபட்டனர். அம்மனிதர்களுக் குள்ளாகவே ஆழமான வேறுபாடு ஒன்றிருந்தது. காயீன் நிலத்தை (உழுது) பயிரிடுகிறவனாயிருந்தார், ஆபேல் ஆடுகளை மேய்ப்பவராயிருந்தார். ஒருவர் (காயீன்) நிலத்தின் கனிகளை அதாவது நன்றி காணிக்கை யொன்றைக் கொண்டு வந்தார். இன்னொருவர், மந்தையின் முதல் ஈற்றுக்களை ஒரு பாவ நிவாரண பலியாகக் கொண்டு வந்தார். காயீனின் காணிக்கையானது ஏதேனில் ஆதாமும் ஏவாளும் ஒன்றுமறியாமையில் (முன்பு) அளித்திருந்திருக்கக் கூடியதைப் போன்றதாக மட்டுமே இருந்தது. இது பாவத்தின் கருத்தை, மன்னிப்புக்கு ஜெபத்தை வெளிக் காண்பிக்க/ உணர்த்தவில்லை. மேலும், காயீன் தனது தம்பி ஆபேலைக் காட்டிலும் விசுவாசத்தில் குறைவுபட்டார் (எபி. 11:4). அவருடைய ஆவி ஆபேலின் ஆவிக்கு நேரெதிரான வகையில், அவிசுவாசமும், சுயநீதியும், சுயசித்தமும் உடையதாயிருந்தது. இது ஏதேன் தோட்ட வாயிலில் பரிசேயன் மற்றும் ஆயக்காரன் நிகழ்ச்சியாக இருந்தது. காயீனின் பொறாமை நிறைந்த வெறுப்பானது கொலை செய்யும்படி அவரை இயக்கியது; ஆபேலின் தேவ நம்பிக்கையானது அவரை இரத்த சாட்சியாக ஆக்கியது: ஒருவர் இரத்தக் கறைபடிந்த மனிதர்களின் நீண்ட வரிசையில் முதல்வரானார்; இன்னொருவர், தேவனுடைய வீரர்களின் வல்லமையான வரிசையில் முதல்வரானார்.*

***6. காயீனின் வம்சா வழி*** *(ஆதி. 4:16-26).—காயீனுக்கு ஏனோக் என்று ஒரு மகன் பிறந்தான், மற்றும் அவர் (காயீன்) ஏனோக் என்று ஒரு நகரைக்*

கட்டியெழுப்பினார். தந்தையைப் போன்றே மகனும் இருந்தார். காயீனின் பரம்பரையில் வந்தவர்கள் இடர்நிறைந்த பணியை ஏற்கும், தேவ பக்தியற்ற இனமாயினர். இந்த வம்சா வழியில், காயீன், ஏனோக்கு, ஈராத், மெகுயவேல், மெத்தூசவேல், லாமேக் ஆகியோர் இருந்தார்கள். பக்கவம்சா வழிகளும் இருந்தன என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. இதன் முடிவில் நிற்கிற லாமேக்கின் குடும்பத்தில் இந்த வம்சா வழியின் பண்பு உச்ச நிலையடைந்த காரணத்தால் இது கொடுக்கப்படுகிறது. லாமேக்கு இரு மனைவிகளைக் கொண்டிருந்தார், அவர்கள் அவருக்கு மூன்று மகன்களைப் பெற்றார்கள்: யூபால், ஒரு இசைக் கலைஞர்; யாபால், ஒரு மந்தை மேய்ப்பவர்; மற்றும் தூபால் காயீன், ஒரு உலோகத் தொழிலாளி. லாமேக்கின் "பட்டயப் பாடலில்" காண்பிக்கப்பட்டபடி, காயீனின் வன்முறையே லாமேக்கில் மீண்டும் வருகிறது:

> "ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள்;
> லாமேக்கின் மனைவிகளே, என் சத்தத்துக்குச் செவி கொடுங்கள்;
> எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்;
> எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை செய்தேன்"
> (ஆதி. 4:23).

சுருக்கமான (இப்)பதிவேட்டிலிருந்து இரு பாடங்கள் பொறுக்கியெடுக்கப்படலாம்: (1) பொருளாதாய நாகரீகமானது தெய்வீகக் கொடையாய் இராமல், முற்றிலும் மனித முன்னேற்றமாகவே உள்ளது. (2) நாகரீகம் என்பது மதமாகவோ அல்லது அதற்குப் பதிலீடாகவோ இருப்பதில்லை. காயீனின் வம்சா வழியானது நமக்குப் பின்வரும் முதல் விஷயங்களைத் தருகின்றது: கொலை, நகரம், பல பெண்களைத் திருமணம் செய்தல், இசைக் கலைஞர், உலோகத் தொழிலாளி, கவிதை; ஆனால் இது "தேவனுடன் சஞ்சரித்த" மனிதர்கள் பற்றி ஒரு உதாரணத்தைக் கூடத் தரவில்லை.

***7. சேத்தின் வம்சா வழி*** (ஆதி. 5).—சேத்திற்குப் பின்பு ஆதாம் மற்ற மகன்களைப் பெற்றிருப்பார் என்பதில் ஐயத்திற்கிடமில்லை, அவர்கள் மூலமாக மற்ற வம்சா வழிகள் ஏற்பட்டிருக்கும். இது (சேத்தின் சந்ததி) இதன் மிகச் சிறந்த பண்பினங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற மற்றும் இந்த இனமானது முழுநிறைவாக்கப்படுவதற்குக் காரணமான நபரான நோவாவுக்கு வழிநடத்தியதாலும், மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தானது (இந்த சந்ததியில்) வர இருந்ததாலும் சேத்தின் சந்ததி (வேதாகமப் பதிவேட்டில்) பாதுகாக்கப்பட்டது. இந்த வம்சா வழியானது பின்வரும் பத்து பெயர்களைக் கொண்டுள்ளது: ஆதாம், சேத், ஏனோஸ், கேனான், மகலாயேல், யாரேத், ஏனோக், மெத்தூசலா, லாமேக்கு, நோவா. முதல் பார்வையில் இது, பிறப்புகள், வயது மற்றும் மரணங்கள் பற்றிய ஒரு குடும்பத்தின் எளிய பதிவேடு போன்று காணப்படுகிறது. மற்றும் இது காயீனின் வம்சா வழியில் வந்த பெயர்களை சில இடங்களில் ஒருமையில் ஒத்துள்ளதாகவும் காணப்படுகிறது. ஆனால் கூறப்பட்ட குறைவான விஷயங்கள் (கூட) அந்த (காயீனின்) வம்சா வழியுடன் மிகவும்

மாறுபடுகின்றன. சேத் மற்றும் ஏனோஸ் ஆகியோரின் நாட்களில் "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்"[11] "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப் படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார்."[12]; இது தெய்வீக ஐக்கியத்தையும் ஆசீர்வதிக்கப்பட்ட அழியாமையையும் சிறப்பாய்க் குறிப்பிடும் கூற்றாகும். நோவா "நீதிமானாயிருந்தார்" மற்றும் அவர் "தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்."[13] பதிவேடு மிகக் குறைவாயிருப்பினும், காயீன் மற்றும் சேத் ஆகியோரின் வம்சா வழியினரின் சித்தரிப்புகளில் மிகவும் வேறுபடுத்துவதாயுள்ளது.

***8. விசுவாச விலக்கமும் ஜலப்பிரளயமும்*** *(ஆதி. 6:1-8:14).—*

*அ. ஜலப்பிரளயத்தின் பாரம்பரியங்கள்.—*இந்த அதிகாரங்கள் மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியொன்றை விவரிக்கின்றன என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. நாம் கண்டுள்ளபடி, ஏதேனின் எதிரொலிகளும் வீழ்ச்சியும் பழங்கால இலக்கியங்கள் பலவற்றில் காணப்படுகின்றன. ஆனால் ஜலப் பிரளயத்தைப் போன்று வேதாகமத்தின் வேறெந்த வரலாறும் இவ்வளவு முழுமையாக ஆதாரம் அளிக்கப்படுவதில்லை. இது ஒரு ஆழமான, நீடித்து நிற்கிற மனப் பதிவை விட்டுச் சென்றுள்ளது. இதன் பாரம்பரியங்கள் துரானியன், ஹெமெட்டிக், செமிட்டிக் மற்றும் ஆர்யன் ஆகிய நான்கு மாபெரும் இனங்களின் மத்தியில் காணப்படுகின்றன. இவைகள் மாபெரும் அளவில் மாறுபடுகின்றன: (இவற்றில்) சில, பல தெய்வ வணக்கத்தால் முற்றிலுமாக உருக்கெடுக்கப்பட்டுள்ளன; ஆனால் பேழை தங்கிய இடத்திற்கு வெகு அருகாமையில் இருந்தவைகள் மிகவும் நுண்ணியவையாகவும், மிகவும் சரியானவையாகவும் இருக்கின்றன. சீனர்கள், இந்துக்கள், கல்தேயர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், செல்த்தியர்கள், லேப்பியர்கள், எஸ்கிமாவ்க்ஸ்கள், மெக்சிக்கேயர்கள் மற்றும் மைய, தெற்கு அமெரிக்கர்கள் யாவரும் பாரம்பரியத்தைப் பாதுகாத்துள்ளனர். இவற்றில் கல்தேயர்களின் பாரம்பரியம் மிகவும் புகழ் பெற்றதும், வேதாகம விவரத்திற்கு மிகவும் அண்மையில் உள்ளதுமாக இருக்கின்றது. இது இரு வடிவங்களில் நிலவுகின்றது: (1) கி.மு. 260ல் கிரேக்க மொழியில் எழுதிய பாபிலோனிய ஆசாரியரான பெரோஸஸ் என்பவரின் பாரம்பரியம். (2) இருபத்து ஐந்து நூற்றாண்டுகளாகப் புதையுண்டு கிடந்த பின்பு 1872ல் நினிவேயின் சிதிலங்களில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட பழங்காலக் கூம்பு வடிவ எழுத்து முறை கொண்ட (கல் அல்லது மண்) பலகைகள்.[14]

*ஆ. ஜலப்பிரளயத்திற்கான ஒழுக்க ரீதியான காரணங்கள்.—*ஜலப் பிரளயமானது வெறுமனே உலகப் பொருள் ரீதியான பேரழிவாய் மட்டும் இருக்கவில்லை. இது மிக மேன்மை வாய்ந்த ஒழுக்க நிகழ்ச்சியாக இருந்தது. ஆதி. *6:5*ஐ வாசியுங்கள். சமுதாயம் ஒழுக்க ரீதியான விஷயங்களில் நம்பிக்கையற்ற அளவுக்கு அழுகிய நிலையில் இருந்தது. விசுவாச விலக்கத் திற்கான காரணங்கள், தேடுவதற்கு வெகு தொலைவில் இருந்ததில்லை. ஆதி. *6:1-5*ஐ வாசியுங்கள். காயீன் மற்றும் சேத் ஆகியோரின் இரு வம்சா வழிகளையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்ன என்பதை நினைவில்

*வையுங்கள். சேத்தின் வம்சா வழியினர் ("தேவ குமாரர்கள்") காயீனின் வம்சா வழியினருடன் ("மனுஷ குமாரத்திகள்") கலப்பு திருமணம் செய்து கொண்டதால் முழுமையான சீர் குலைவு விளைந்திருக்கலாம்.*[15] *தீமையு டனான எல்லா உடன்பாடுகளிலும் உள்ளது போன்றே அனுகூலங்கள் யாவும் தவறான பக்கமே இருந்தன. விசுவாச விலக்கத்தின் விளைவாக (மனித) இன அழிவு ஏற்பட்டது. மிக உச்சமான குற்றம் மிக உச்சமான தண்டனையை வருவிக்கிறது. கடினப்பட்ட (இருதயம் கொண்ட) குற்றவாளியை நாம் ஆயுள் தண்டனை கொடுத்துச் சிறையில் அடைக்கின் றோம் அல்லது அவன் சாகும் வரை தூக்கில் இடுகின்றோம். ஜலப்பிரளயத் திற்கு முன்பிருந்த மக்கள் தங்கள் குற்றங்களுக்காகப் பூமியிலிருந்து துடைத்தெறியப்பட்ட கடைசி மக்களாய் இருந்ததில்லை. ஜலப்பிரளயத் தின் தண்ணீரும், சோதோமை வேகமாய்த் தாக்கி என்றென்றுமாய் அழித்த அக்கினியின் மழையும், கொள்ளை நோயின் சுவாசமும், யுத்தத்தின் கொந்தளிப்பும், நியாயத்தீர்ப்பின் தெய்வீக செய்தியாளர்களாய் இருந்துள்ளன.*

*இ. ஜலப்பிரளயத்தின் வழிமுறைகள்.—பூமியைப் படைத்தவர் அதன் அழிவுக்கான ஏராளமான வழிமுறைகளைக் கட்டுப்படுத்துகின்றார். மனித யுகத்திற்கு முன்பு இந்த பூமியானது மீண்டும் மீண்டுமாக மழைகளினால் வெள்ளம் சூழப்பட்டு, கடல்களுக்கு அடியில் அமிழ்ந்திருக்க வேண்டும். மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களும் திறவுண்டன, மற்றும் வானத்தின் மதகுகளும் திறவுண்டன (ஆதி. 7:11). மனிதனின் தோற்றத்திற்கு முன் அடிக்கடி நடைபெற்ற விஷயமானது ஒரு மாபெரும் ஒழுக்கத்தின் நோக்கத்திற்காக தேவனுடைய அருளிரக்கத்தின் கீழ் சுலபமாக நடை பெற்றிருக்கலாம். மேற்கு ஆசியாவின் (சில) பகுதிகள் இன்னமும் கடலின் கீழ் உள்ளன, மற்றும் பிற பகுதிகளின் நிலைத்த பாகமானது அவற்றை மூழ்கடித்து, ஆயிரக்கணக்கானவற்றைப் பூமியிலிருந்து துடைத்தெறியும்.*

*ஈ. ஜலப்பிரளயத்தின் கால அளவும் விரிவெல்லையும்.—நாற்பது நாட்கள் அளவாக மழை பெய்தது. தண்ணீரானது நூற்றைம்பது நாட்கள் தொடர்ந்து பெருகிக் கொண்டிருந்தது, மற்றும் அது வற்றுவதற்கு இருநூற்று இருபத்தி ஐந்து நாட்களாயிற்று. இது, ஒன்று உலகளாவியதாக இருந்தது அல்லது மிகப் பெரும்பாலும் மனித இனம் பூமியின்மீது எல்லா இடங்களிலும் பரவுவதற்கு முன்பு மனித இனத்தின் வரலாற்றில் தொடக்க காலத்தில் நடந்திருக்கலாம். இவ்விரண்டில் எந்தக் கண்ணோட்டமும் உலகளாவிய பாரம்பரியத்தை விவரிப்பதாயிருக்கும்.*

*உ. நோவாவும் ஜலப்பிரளயமும்.—சில பெயர்கள் மாபெரும் நிகழ்வு கள் நடந்த சகாப்தங்களுடன் எப்பொழுதும் இணைவு படுத்தப் பட்டுள்ளன. நேரு பஞ்சசீலக் கொள்கையுடன், வல்லபாய் பட்டேல் ஒருமைப்படுத்துதலுடன், மோசே வனாந்திர யாத்திரையுடன்; அது போலவே நோவா ஜலப்பிரளயத்துடன் (இணைவு படுத்தப்படுகின்றார்). ஆதி. 6:9; 7:1; எசே. 14:14 ஆகிய வசனப் பகுதிகளை வாசியுங்கள். நோவா தேவனுடைய மனுஷனாக, விசுவாச விலக்க காலத்தில் வீரத்துவத்தின் உருவகமாக இருந்தார். பலிபீடத்திற்குப் பின் பலிபீடம் சிதைந்து நொறுங்கி*

*யிருந்தன. ஆனால் நோவாவின் பலிபீடத்தின் மீதியிருந்த அக்கினியோ வெள்ளத்தினால் அணைக்கப்படும் வரை தொடர்ந்து (எரிந்து கொண்டு) இருந்தது. தனியே நிலை நிற்பதற்குத் தைரியம் வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு சிலர் மட்டுமே பின்பற்றத் துணிந்த பொழுது நோவா வழிநடத்தத் துணிந்தார். நோவாவின் முழுமையான கீழ்ப்படிதலும் பாதுகாப்பும், (மக்கள்) இனத்தின் நம்பிக்கையற்ற மோசம்போன நிலையும் அழிவும் - இவை போன்றவைகள் மனதில் ஆழப்பதியும் பாடங்களாக உள்ளன. நோவா நூற்றிருபது ஆண்டுகளாகப் பிரசங்கித்து வீரத்துவமாக வாழ்ந்தார். அவருடைய உழைப்புகளுக்குப் பலனாக ஏழு பேர் மாத்திரமே மனம் மாறினார்கள்: அவரது மனைவி, மற்றும் அவரது மகன்கள் சேம், காம், யாப்பேத் மற்றும் அவர்களின் மனைவிகள். இருப்பினும், நோவா வெற்றி பெற்றவராகவே இருந்தார்: அவர் தமது கடமையைச் செய்தார், மற்றும் அவர் பெரு வெள்ளத்தை விட்டு அப்பால் பயணம் செய்தார்.*

---

*குறிப்புகள்*

[1]*டீன் இவ்விடத்தில்* "wrought" *என்று எழுதியிருந்தார்.* [2]*ஆதி. 1:1.* [3]*ஆதி. 1:2.* [4]*ஆதி. 1:26.* [5]*ஆதி. 2:16.* [6]*ஆதி. 2:17.* [7]*ஆதி. 3:1, 4.* [8]*ஆதி. 3:8.* [9]*கெய்க்கியின்* "Hours with the Bible," *என்ற நூலில்* Vol. I, Chap. *8ல் காணவும்.* [10]Delitzsch, quoted in Smith's O.T. Hist., p. 29.

[11]*ஆதி. 4:26.* [12]*ஆதி. 5:24.* [13]*ஆதி. 6:9.* [14]*கெய்க்கியின்* "Hours with the Bible," *என்ற நூலில்* Vol. I., Chap. 13*ல் காணவும்.* [15]*ஆதி. 6:2.*